**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 120/2021**

நாள்: 14.11.2025.

பெயர்: ஆரோக்கியசாமி (வா.சா.2) த/பெ: மரியபிரகாசம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1) தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது, என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாதை உரிமை பரிகாரம் கேட்டு. எனது சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 405 ஆகும். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பொது பாதையாகும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது முதல் விசாரணையில் 29.11.1980 தேதிய பதிவு செய்யபட்ட பாகப் பிரிவினை வாதியின் தந்தைக்கு கிடைத்த சொத்து என நான் கூறியுள்ளதில் அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, எனது தந்தை கூறி தான் தெரியும். வாதியின் தந்தைக்கு எத்தனை மகன்கள் என்றால் 5 மகன்கள் ஆவார்கள், பெண் பிள்ளைகள் கிடையாது. வாதியின் தந்தை அற்புதசாமி அவரது மகன்களுக்கு பாகம் பிரித்துக் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். எந்த வருடம், எந்த தேதியில் பிரித்துக்கொடுத்தார் என்றால் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னர், தேதி, வருடம் ஞாபகம் இல்லை.

2) பாகம் பிரிந்தப் பின்னர் சுவாதினத்தைப் பொறுத்து வருவாய் ஆவணங்களில் வாதி மாற்றம் செய்து விட்டாரா என்றால் இல்லை. தற்போது வரையில் தாவா சொத்துக்களின் உரிமையாளர் யார் என்றால் வாதியின் தந்தை ஆவார். A ஷெட்டியூல் சொத்து, B ஷெட்டியூல் சொத்து என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி A ஷெட்டியூலில் உரிமை கோருகிறாரா அல்லது B ஷெட்டியூலில் உரிமை கோருகிறாரா என்றால் எனக்கு தெரியாது.

பிரதிவாதி எந்த ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது, பிரதிவாதியின் தாத்தா கிரையம் பெற்றது என கூறியுள்ளனர்.

3) தாவா A ஷெட்டியூல் சொத்திற்கு வடபுறம் உள்ள தேசிய நெடுஞ்சாலை போடப்பட்டு 2 ஆண்டுகள் ஆகும். கிராமத்தில் உள்ள தார் சாலையிலிருந்து கீழ்புறம் உள்ள எனது நிலம் வழியாக வாதி நிலத்திற்கு தனிநபர் நடைபாதை உள்ளது என்றால் அது என்னுடைய சொத்து, நான் மட்டுமே பயன்படுத்தி வருகிறேன். வாதியின் தந்தையுடைய சொத்து விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அதன் சர்வே எண் விபரங்கள் என்ன என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா A ஷெட்டியூல் சொத்திற்கு வடபுறத்தில் கீழ்புற மூலையில் சர்வே எண் 385/3C2 இருந்தது என்றால் எனக்கு தெரியாது, அந்த சொத்தை சாலை விரிவாக்கத்திற்காக வாதியின் தந்தை உரிய இழப்பீடு பெற்றுக்கொண்டு கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. A ஷெட்டியூல் சொத்திலிருந்து வடபுறத்தில் கீழ்புறமுள்ள பகுதியை வாதியின் தந்தை பாதையாக பயன்படுத்திக்கொண்டு தற்போது பாதை இல்லை என்று வாதி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

4) தாவா A ஷெட்டியூல் சொத்திற்கு மேல்புறம் யார் சொத்து என்றால் பிரான்சிஸ் சேவியர் கிரையம் பெற்றார், தற்போது யாருடையது என்று எனக்கு தெரியாது. மேற்படி பிரான்சிஸ் சேவியர் கிரைய சொத்திற்கு நான்கு புறமும் கம்பி வேலி வைத்து அடைக்கப்பட்டது என்றால் சரிதான். பிரான்சிஸ் சேவியர் கிரைய சொத்திற்கு மேல்புறம் யார் சொத்து என்றால் சூசைமுத்துவின் சொத்து ஆகும். சூசைமுத்துவின் சொத்திற்கு நான்கு புறமும் கம்பி வேலி வைத்து அடைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், சூசைமுத்துப் போடவில்லை, பக்கத்து சொத்துக்காரர்கள் போட்டது. சூசைமுத்து சொத்திற்கு தென்புறம் சுமார் 6 அடி அகலமுள்ள கேட் வைத்து அதன் வழியாக சென்று வருகிறார் என்றால் பிரதிவாதி பாதையை அடைத்ததற்கு பின்னிட்டு தான் அந்த வழியாக சென்று வருகிறார், அவர் மட்டும் இன்றி மற்றவர்களும் பிரதிவாதி பாதையை

அடைத்ததற்கு பின்னிட்டு இருதயசாமியின் முந்திரி தோப்பு வழியாக அனுமதி பெற்று சென்று வருகின்றனர்.

5) சூசைமுத்து நிலத்திற்கு மேல்புறம் யாருடைய நிலம் என்றால் பிரதிவாதி அருமைராஜ் நிலம் ஆகும். அருமைராஜ் நிலத்திற்கு மேல்புறம் அருளானந்தம், இன்னாசி, செபஸ்தியன், அம்புரோஸ், இருதய உடையார், ஆரோக்கிய உடையார் ஆகியோர்களது நிலம் உள்ளதா என்றால் முன்னர் இருந்தது, தற்போது அனைவரும் பிரான்சிஸ் சேவியர், பிரதிவாதி ஆகியோர் கிரையம் பெற்றுவிட்டனர். சர்வே எண் 385/3A, 385/3B வழியாக தான் சர்வே எண்.385/3C1 ற்கு சென்று வரவேண்டும் என்றால் சரிதான். நான் வாதிக்கு உறவினரா என்றால் தூரத்து சொந்தம். எனது பாதை வழியாக நான் வாதியை செல்ல அனுமதிக்க மாட்டேன் என்றால் சரிதான், அவர் வேண்டுகோளுக்கினங்க நான் சில சமயம் அனுமதித்துள்ளேன். வாதிக்கு எந்த ஒரு நிலமும் இல்லை என்றால் சரிதான், தாவா A ஷெட்டியூல் சொத்து வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். A ஷெட்டியூல் சொத்திற்கு வடக்கில் கீழ்புறம் சர்வே எண்.385/3C2 நிலம் வாதியின் தந்தைக்கு இருந்து அதனை அவர் தேசிய நெடுஞ்சாலைக்கு கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. தேசிய நெடுஞ்சாலையை பொது மக்கள் அனைவரும் உபயோகப்படுத்தலாம் என்றால் சரிதான். A ஷெட்டியூல் சொத்திற்கு தேசிய நெடுஞ்சாலை வழியாக உரிய பாதை உள்ளது என்றால் இல்லை.

6) பிரதிவாதி கிரையம் பெற்ற நாளிலிருந்து இது நாள் வரை பிரதிவாதியை தவிர வேறு யாரும் அவருடைய சொத்தின் வழியாக சென்றதும் இல்லை, அந்த சொத்து முழுவதும் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வாதி எனது உறவினர் மற்றும் ஊர் காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருமைராஜ் தாவா B ஷெட்டியூல் சொத்தை கிரையம் பெற்றார் என்றால் அது

அவரது குடும்பத்தினருக்குள் மாற்றிக்கொண்ட சொத்து ஆகும். 1983 ஆண்டு முதல் 40 ஆண்டுகளாக B ஷெட்டியூல் மற்றும் இதர சொத்தை பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது, 2 ஆண்டுகளுக்கு முன்பு பிரதிவாதி அடைத்து வைத்த விபரம் தான் தெரியும்.

ஒப்பம்/ம.ஆரோக்கியசாமி/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.